**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 15/2022</u>**

**<u>நாள் – 10.07.2025</u>**

**PW – 1** : கௌரி

க/பெ. : லேட்.துரைராஜ்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2025)**

**<u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. விபத்து சமயம் தெரிந்தவருடைய துக்க நிகழ்ச்சியில் கலந்து விட்டு திரும்பி வரும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நாங்கள் சென்ற டெம்போ டிராவலர் வேனில் சுமார் 20 பேர் பயணித்தோம் என்றால் சரிதான், அதில் எத்தனை பேர் இருந்தோம் என்று எண்ணிக்கை செய்யவில்லை. பயணித்த நபர்களின் பெயரை சொன்னாலும் என்னால் அடையாளம் காணமுடியாது. நாங்கள் சென்ற வேனில் 13 நபர்கள் மட்டும் தான் பயணிக்க மட்டும் தான் அனுமதி உண்டு என்றும், ஆனால் நாங்கள் 20 பேர் அந்த வேனில் பயணித்ததால் தான் பாரம் தாங்காமல் 1–ம் எதிர்மனுதாரர் இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது, ஆனால் எல்லோரிடமும் விசாரித்தார்கள். இந்த விபத்து 31.08.2018–ம் தேதியில் தான் நடந்தது என்றால் சரிதான். ஆனால், 4 நாட்கள் கழித்து தான் 04.09.2018–ம் தேதியில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த 4 நாட்கள் காலதாமதம் எதனால் ஏற்பட்டது என்பது நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. விபத்துக்கு பின்னிட்டு நான் திருப்பூர் பி.எம்.ஆர்த்தோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அந்த

மருத்துவமனையில் கொடுத்த காயச்சான்றிதழின்படி எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று தான் மருத்துவர் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மருத்துவர் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ள நிலையில் நான் முதல் விசாரணையில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் மருத்துவமனையில் வெளிநோயாளியாக தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். எனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டு விட்டதாக நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் நான் டெய்லர் வேலை செய்து வந்ததாகவும், அதில் மாத வருமானம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாகவும் இந்த மனுவிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் வேனில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கும் மேலாக நபர்கள் பயணித்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதற்கு 3-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் தாக்கல்செய்துள்ள இந்த இழப்பீட்டு மனுவை 3-ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.10 16:58:50 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**